# 3 பல்கலாசாரச்சமூகம்

## 3.1 பல்கலாசாரச் சமூகத்தை இனங்காண்போம்

### 3.1.1 கலாசாரம் என்றால் என்ன?

கலாசாரம் என்பதற்கு பல வரைவிலக்கணமுண்டு. சமூகவியலாளர்கள் அரசியல் அறிஞர்கள் வரலாற்றாளர்கள் இதுபற்றிக் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

ஈ.பி. டய்லர் என்ற மானிடவியலாளர் கலாசாரம் என்பதை பின்வருமாறு வரை விலக்கணப்படுத்தியுள்ளார்.


கலாசாரம் என்பது அறிவு, வழிபாடு கலை, சட்டம், பழக்கவழங்கங்கள், மதிப்பீடுகள் மற்றும் சமூகத்தில் வாழும் ஒரு பிரஜை என்ற வகையில் மனிதர்களால் பெற்றுக்கொள்ளும் பழக்கவழக்க ஆற்றல்களின் கூட்டாகும்.

மேற்படி கூற்றில் இருந்து விளங்குவது எமது அனைத்து செயற்பாடுகள், சிந்தனைகள், எதிர்பார்ப்புகள், அனைத்தும் கலாசாரத்திற்கு உட்படுவது என்பதாகும்.

நாம் அனைவரும் சமூகம் அங்கீகரித்த வாழ்க்கைக் கோலத்தின் படி ஒழுகப் பழகியுள்ளோம். இந்தப் பழக்கம் அல்லது பண்புகளே கலாசாரமாகும். பிறப்பு முதல் இறப்பு வரை நாம் எமது கலாசாரத்தின் படியே நடந்து கொள்கிறோம்.

"நீங்கள் பேசுவது மனிதர்களைப் பற்றியா? அவ்வாறானால் நிச்சயம் கலாசாரம் பற்றிப் பேசுவது திண்ணம்."

- **பர்னாட் ரொன்ஸன்பர்க் மற்றும் கொஸர்**




உரு 3.1

அனைத்து சமூகங்களிலும் கலாசாரம் அச்சமூகத்தின் நிலைப்பாட்டுக்காக பல பணிகளை மேற்கொள்ளும். காலங்காலமாக படிப்படியாக சமூகத்தில் கட்டியெழுப்பப்படும் கலாசாரம் மாற்றமடைந்து விருத்தியடைந்து நீடித்திருக்கும் ஒருசெயலொழுங்காகும்.

மனிதன் வாழும் சமூகத்திற்கேற்ப கலாசாரம் மாறுபடும். இதனால் பல்வேறு சமூகங்களில் அதற்கேயுரிய கலாசாரங்கள் உருவாகியுள்ளன.

**செயற்பாடு 3.1**

நீங்கள் வாழும் சமூகத்தில் ஒரு விழாவின்போது காணக்கூடியதாக இருக்கும் செயலொழுங்குகளை அவதானித்து அதனைப் படிமுறையாக எழுதுங்கள். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் சந்தர்ப்பங்கள் எவையென்பதை அறிந்து கொள்ளவும்.

### 3.1.2 பல்கலாசாரச் சமூகம்

பல்வேறு கலாசாரங்களைச் சேர்ந்தவர்கள் ஒரே சமூகத்தில் வாழ்வதாயின் அத்தகைய சமூகம் பல்கலாசாரச் சமூகம் எனப்படும்.

பல்கலாசாரச் சமூகமொன்றில் பலமொழி பேசும், பல சமயங்களைப் பின்பற்றும், பல பழக்கவழக்கங்களையுடையவர்கள் ஒரே ஆட்சிக் கட்டமைப்பின் கீழ் வாழ்வதைக் காணலாம். இன்றைய உலகில் அநேக நாடுகள் பல்கலாசார சமூகங்களாக இனங்காட்டப்பட்டுள்ளன.

இலங்கையும் பல்கலாசார சமூகத்துக்கான சிறந்த உதாரணமாகும்.

### 3.1.3 பல்கலாசார சமூகத்தின் பிரதான பண்புகள்

பல்கலாசாரச் சமூகத்தின் பொதுவான அடிப்படை இயல்புகள் சிலவற்றை பின்வருமாறு இனங்கண்டு கொள்ளலாம்.

- பலஇன, மத, குல, கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் ஒரே நாட்டில் வாழ்தல்
- ஒவ்வொரு கலாசாரத்திற்குமுரிய குறிப்பிடத்தக்க பழக்கவழக்கங்கள் ஒழுக்கமாண்புகள், மதிப்பீடுகள் தொகுதியொன்று காணப்படல்.
- ஒவ்வொரு கலாசாரத்திற்குமுரிய மக்கள் குழுக்கள் பிரதேச ரீதியாக ஒன்றுபட முயற்சித்தல்.
- சமூகத்தின் பிரதான கலாசாரத்தினால் ஏனைய கலாசாரங்கள் ஒதுக்கப்படுகின்றன, என்ற குற்றச்சாட்டுக்கள் காணப்படுவதும் மோதல்கள் ஏற்படுவதும்.
- கலாசார ஒருமைப்பாட்டையும் ஒன்றிணைப்பையும் ஏற்படுத்திக்கொண்ட சமூகங்களின் அபிவிருத்தி இலக்கை அடைந்திருத்தல்

### 3.1.4 இலங்கை ஒரு பல் கலாசாரச் சமூகம்

இலங்கை பல இனங்களைச் சேர்ந்த பல மதங்களைப் பின்பற்றும் பல மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் ஒரு பல் கலாசார சமூகம் என இனங்காணலாம்.இன அடிப்படையில் பார்க்கும்போது இலங்கையில் சிங்களவர், இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர், முஸ்லீம்கள் ஆகிய பிரதான இனத்தவர்கள் வாழ்கின்றனர். இதற்கு மேலதிகமாக பறங்கியர், மலேயர் ஆகிய இனத்தவர்களும் ஆதிவாசியான வேடர்களும் குறவர்களும், காபிரி வமிசத்தவர்கள் என்போரும் இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களாக வாழ்கின்றனர்.

**இலங்கையின் சனத்தொகை வீதம்**

| இனம் | வீதம்% |
|---|---|
| சிங்களவர் | 74.0 |
| இலங்கைத் தழிழர் | 12.6 |
| இந்தியத் தமிழர் | 5.5 |
| இலங்கை முஸ்லீம் | 7.1 |
| ஏனையவர் | 0.8 |

அட்டவணை உரு 3.1

மூலம் - இலங்கை சமூக, பொருளாதார தரவு - 2006 இலங்கை மத்திய வங்கி













உரு 3.2

இலங்கையின் பிரதான இனங்களை எடுத்துக்காட்டும் 6 படங்கள் இங்கு காணப்படுகின்றன. ஒவ்வொரு படத்திலும் எந்த இனம் காணப்படுகின்றன. என்பதனை உங்களின் புத்தகத்தில் குறிப்பிடுக.

**ජාතීන් සහ දිස්ත්‍රික්ක අනුව ජනගහණය, සංගණනය 1981, 2001**

**1981, 2001ஆம் ஆண்டு தொகைமதிப்பில் இனத்தொகுதிப்படியும், மாவட்டப்படியும் சனத்தொகை**

**Population by ethnic group and district, Census 1981, 2001**

| දිස්ත්‍රික්කය | மாவட்டம் | District | 1981 එකතුව மொத்தம் Total | සිංහල சிங்களவர் Sinhalees | ශ්‍රී ලංකා දෙමළ இலங்கைத் தமிழர் Sri Lanka Tamil | ඉන්දියානු දෙමළ இந்தியத் தமிழர் Indian Tamil | ශ්‍රී ලංකා මුස්ලිම් இலங்கைச் சோனகர் Sri Lanka Moor | ලංසි பறங்கியர் Burgher | මැලේ மலாய் Malay | අනිකුත් ஏனையோர் Others |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ශ්‍රී ලංකාව** | **இலங்கை** | **Sri Lanka** | **14,846,750** | **10,979,568** | **1,886,884** | **818,656** | **1,048,927** | **39,374** | **46,963** | **28,398** |
| කොළඹ | கொழும்பு | Colombo | 1,699,241 | 1,318,835 | 170,590 | 19,824 | 139,743 | 19,688 | 22,233 | 8,328 |
| ගම්පහ | கம்பஹா | Gampaha | 1,390,882 | 1,279,512 | 48,182 | 5,919 | 37,826 | 8,423 | 8,675 | 2,325 |
| කළුතර | களுத்துறை | Kalutara | 829,704 | 723,433 | 9,744 | 33,659 | 61,159 | 431 | 762 | 456 |
| මහනුවර | கண்டி | Kandy | 1,045,317 | 775,501 | 62,791 | 88,436 | 109,779 | 2,122 | 2,755 | 3,633 |
| මාතලේ | மாத்தளை | Matale | 357,354 | 285,354 | 20,579 | 24,912 | 24,995 | 272 | 574 | 558 |
| නුවර එළිය | நுவரெலியா | Nuwara-Eliya | 603,577 | 254,375 | 76,449 | 257,478 | 12,163 | 696 | 1,135 | 1,280 |
| ගාල්ල | காலி | Galle | 814,531 | 769,343 | 7,271 | 11,068 | 25,878 | 288 | 188 | 709 |
| මාතර | மாத்தறை | Matara | 643,766 | 606,516 | 4,683 | 13,875 | 16,122 | 205 | 79 | 306 |
| හම්බන්තොට | அம்பாந்தோட்டை | Hambantota | 424,344 | 412,055 | 2,500 | 284 | 4,899 | 82 | 4,445 | 79 |
| යාපනය | யாழ்ப்பாணம் | Jaffna | 830,552 | 6,659 | 790,385 | 19,960 | 12,850 | 383 | 72 | 115 |
| මන්නාරම | மன்னார் | Mannar | 105,235 | 8,683 | 54,474 | 13,850 | 27,717 | 35 | 35 | 1,440 |
| වවුනියාව | வவுனியா | Vavuniya | 95,428 | 15,794 | 54,179 | 18,714 | 6,505 | 25 | 34 | 177 |
| මුලතිව් | முல்லைத்தீவு | Mulaitivu | 77,189 | 3,992 | 58,209 | 11,215 | 3,651 | 95 | 19 | 08 |
| මඩකලපුව | மட்டக்களப்பு | Batticaloa | 330,333 | 11,255 | 233,713 | 4,074 | 78,829 | 2,292 | 46 | 124 |
| අම්පාර | அம்பாறை | Ampara | 368,970 | 148,943 | 77,826 | 1,711 | 161,588 | 697 | 168 | 357 |
| ත්‍රිකුණාමලය | திருகோணமலை | Trincomalee | 255,948 | 85,503 | 67,760 | 5,372 | 75,038 | 1,169 | 531 | 274 |
| කුරුණෑගල | குருநாகல் | Kurunagala | 1,211,801 | 1,125,912 | 14,920 | 6,616 | 60,791 | 562 | 1,259 | 1,741 |
| පුත්තලම | புத்தளம் | Puttalam | 492,533 | 407,067 | 32,282 | 2,289 | 49,000 | 440 | 954 | 501 |
| අනුරාධපුරය | அநுராதபுரம் | Anuradhapura | 587,929 | 535,834 | 8,026 | 719 | 41,777 | 228 | 338 | 1,007 |
| පොළොන්නරුව | பொலன்னறுவை | Polonnaruwa | 281,563 | 238,965 | 5,267 | 124 | 16,638 | 59 | 109 | 433 |
| බදුල්ල | பதுளை | Badulla | 640,952 | 443,024 | 37,520 | 129,496 | 26,600 | 613 | 1,419 | 2,278 |
| මොණරාගල | மொனறாகலை | Monaragala | 273,570 | 253,572 | 5,345 | 8,859 | 5,312 | 70 | 183 | 218 |
| රත්නපුර | இரத்தினபுரி | Ratnapura | 797,067 | 677,510 | 19,094 | 84,740 | 13,781 | 342 | 412 | 1,195 |
| කෑගල්ල | கேகாலை | Kegalla | 694,944 | 588,581 | 15,074 | 45,752 | 34,389 | 156 | 229 | 763 |

அட்டவணை 3-1

இலங்கையின் நிர்வாக மாவட்டங்களின் சனத்தொகை

**சமய ரீதியில் இலங்கையின் சனத்தொகை**

| சமயம் | வீதம் % |
|---|---|
| பௌத்தம் | 69.3 |
| இந்து | 15.5 |
| இஸ்லாம் | 7.5 |
| கிறிஸ்தவம் | 7.6 |
| ஏனையோர் | 8.1 |

சமய ரீதியில் நோக்கும்போது இலங்கையில் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம், ஆகிய பிரதான சமயங்களைப் பின்பற்றுகிறவர்கள் வாழ்கின்றனர்.

## 3.2 பல்கலாசாரச் சமூகம் உருவாகுதலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

**"உலகின் எந்தக் கலாசாரமும் நூற்றுக்குநூறு தூய்மையானதல்ல"** என்பது மானிடவியலாளர்களின் கருத்தாகும். இதன்படி அனைத்துக் கலாசாரங்களும் வேறு கலாசாரங்களின் செல்வாக்குட்பட்டது. அதன் காரணமாக கலாசாரங்களில் மாற்றங்கள் ஏற்படுவதுடன் பல் கலாசாரங்களும் உருவாகின்றது.

**பல்கலாசாரம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பார்ப்போம்.**

### 3.2.1 கலாசாரத் திணிப்பு

ஒரு பலம் வாய்ந்த கலாசாரத்தினால் வேறொரு கலாசாரம் ஆக்கிரமிப்பிற்குட்படும்போது பலம் வாய்ந்த கலாசாரம் கீழ்ப்படிந்த கலாசாரத்தின்மீது அவர்களது கலாசாரப் பண்புகளைத் திணிப்பதன் மூலம் பலவீனமான கலாசாரத்தில் உருவாகும் புதிய கலாசாரம் காரணமாக பல்கலாசார சமூகமொன்று உருவாகின்றது. இது கலாசாரத் திணிப்பு என அழைக்கப்படும்.

உதாரணமாக இலங்கை ஐரோப்பியரின் குடியேற்றமாக மாறியதன்பின் கிறிஸ்தவ சமயம் போதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதனுடன் தொடர்பான புதிய கலாசாரக் மாற்றமொன்று உருவானமையைக் குறிப்பிடலாம்.

### 3.2.2 பரவுதல்

ஒரு கலாசாரத்தில் உருவாகும் சில அம்சங்கள் வேறொரு கலாசாரத்தில் பரவும் சந்தர்ப்பங்களுண்டு. இது கட்டாயத்தின் பேரில் நடப்பதன்று. ஒரு கலாசாரத்தின் பெறுமானங்கள் மற்றைய கலாசாரத்தின் ஊட்டத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பங்களுமுண்டு. கலாசாரப் பரவல் மூன்று முறைகளினால் ஏற்படமுடியும்.

**I. நேரடிப்பரவல்**

ஒரு கலாசாரத்தில் உருவான மிக முக்கிய ஒரு பெறுமானம் மிக விரைவில் ஏனைய கலாசாரங்களை நோக்கி பரவுதல் நேரடிப் பரவுதலாகும். கி.பி. 1505இல் சீனா கடதாசி உற்பத்தியை ஆரம்பித்தபோது அது ஏனைய நாடுகளில் வேகமாகப் பரவியது.

**II இடைத்தொடர்பு காரணமாக ஏற்படும் பரவல்**

கலாசாரங்களுக்கிடையிலான அரசியல், கலாசார சமூகத் தொடர்புகளினால் கலாசார முரண்பாடுகள் ஏற்படுவதனால் பல் கலாசாரங்கள் உருவாகின்றன. பண்டைய மன்னர்கள் தெற்கிந்திய இளவரசிகளை மணந்துக் கொண்டமையினால் இந்து கலாசாரப் பண்புகள் இலங்கைக் கலாசாரத்தில் புகுந்தன.

**III தூண்டல் ரீதியான பரவல்**


தமது கலாசார மேம்பாட்டுக்கான வேறு கலாசார அம்சங்களை இணைத்துக்கொள்ளல் தூண்டல் ரீதியான பரவலாகும். இதுவும் பன்மைக் கலாசாரம் உருவாகுதல் செல்வாக்குச் செலுத்தும் காரணியாகும்.

மகிந்தன் வருகையுடன் பௌத்த கலாசார அம்சங்களை இலங்கைக் கலாசாரம் ஏற்றுக்கொண்டதைக் காணலாம்.









உரு 3.3

**செயற்பாடு 3.3**

◆நீங்கள் வாழும் பிரதேசத்திலுள்ள மாற்றுக் கலாசாரங்களை சேர்ந்த மக்கள் பற்றிய தகவல்களைத் தேடி பின்வரும் அட்டவனையைப் பூர்த்தி செய்யவும்.

| இனம் | பின்பற்றும் சமயம் | பிரதான உணவு | ஆடையணிகள் | பேசும்மொழி |
|---|---|---|---|---|
| | | | | |

### 3.2.3 கலவரங்களும் புரட்சிகளும்

கலவரங்கள் புரட்சிகள் பல் கலாசாரச் சமூகத்தை தோற்றுவிப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. ஒரு கலவரத்தின் அல்லது புரட்சியின் பின் உருவாகும் புதிய சமூகம் அவர்களுக்கேயுரிய ஒரு கலாசாரத்தை தேர்ந்தெடுக்க முயற்சிக்கும்.

அல்ஜீரியர்கள் சுதந்திர போராட்டத்தின் பின் பிரான்ஸில் இருந்து விடுதலை பெற்று தனியொரு ஆட்சிமுறை, கலாசாரம் கொண்ட, புதிய அல்ஜீரியா எனும் அரசை உருவாக்கினர்.

### 3.2.4 வர்த்தகமயமாக்கல்

சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் விரிவடைந்த காரணத்தினால் கலாசாரப் பரிமாற்றங்கள் நடை பெறுவதுடன் அதுவும் பல்கலாசார சமூகங்கள் உருவானமைக்கு

வர்த்தக நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு வந்த அரேபியச் செல்வாக்கினால் இஸ்லாமியச் கலாசாரம் இலங்கையில் பரவியது.

### 3.2.5 குடிபெயர்வு

யாத்திரைக்காகவும், தொழில் நோக்கத்திற்காகவும், கல்வி பெறுவதற்காகவும்,ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு குடி பெயரும் மக்களின் செல்வாக்கினாலும், கலாச்சார பண்புகள் விரைவில் கலக்கும் வாய்ப்புண்டு.

பிரித்தானியர் காலத்தில் தோட்டங்களில் வேலை செய்ய இலங்கைக்கு அழைக்கப்பட்ட தென் இந்திய தமிழ் மக்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் குடியேறிமையால் இந்திய தமிழ் கலாசாரம் இலங்கையில் பரவியது.

### 3.2.6. புதிய கண்டு பிடிப்புகளும் உற்பத்திகளும்

விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக நாளாந்தம் நுகர்வு பட்டியலில் சேரும் உபகரணங்கள் மூலம் கலாசார மாற்றங்கள் நிகழ்கின்றன.

உழவு இயந்திரத்தின் உற்பத்தி காரணமாக பயிர்ச்செய்கையில் மனித உழைப்பை பயன்படுத்துவதில் மாற்றம் ஏற்பட்டது. இது இலங்கையின் சமூக கலாசாரத்தில் ஏற்பட்ட புதிய மாற்றங்களை ஏற்படுத்தியது.

### 3.2.7 ஊடக தகவல் தொழில் நுட்ப முன்னேற்றம்

ஊடக தகவல் தொழில் நுட்ப முன்னேற்றமும் கலாச்சார மாற்றங்களுக்கு காரணமாய் காரணமாய் அமைந்து அதன் மூலம் பல் கலாசார சமூகங்கள் உருவாவதில் செல்வாக்கு செலுத்துகின்றன. இணையம் போன்ற ஊடகங்களால் கலாச்சார அம்சங்கள் பரிமாற்றம் நிகழ்கிறது தொலைக்காட்சியின் செல்வாக்கினாலும் பல் கலாசாரம் பரவுகின்றது.

### 3.2.8. பூகோள மயமாதல்

விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக உலக நாடுகள் அனைத்தும் ஒரு அலகாக (பூகோள கிராமம்) கருமமாற்ற முயற்சியெடுத்தல் பூகோள மயமாக்கல் எனப்படும். இதனூடாக அனைத்துக் கலாசாரங்களும் மாற்றத்துக்குட்படும் நிலையுண்டு. இது பன்மைச் சமூகம் தோன்றுதலில் பெருமளவு செல்வாக்குச் செலுத்தும்.

இன்று எமது கலாசாரத்தில் இணைந்துள்ள பல்வேறு உணவு,பானங்கள், ஆடைஅலங்காரங்கள், பூகோள மயமாக்கல் ஊடாக வந்தவையாகும். இதற்கு மேலாக போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்தினாலும் கலாசாரம் மிக இலகுவில் இடம் பெயரும் நிலையுள்ளது.

### 3.3 பல்கலாசாரச் சமூகமும் நவீன அரசும்

“**நவீன அரசு**” என்ற அரசியல் எண்ணக்கரு இன்றைய உலகில் மதிக்கப்படும் ஒரு ஆட்சிமுறையாகவுள்ளது. இதன் மூலம் கருதப்படுவது அரசு என்பது ஒரு இனம் என்பதாகும். ஒரு நாட்டில் பல்கலாசாரங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் ஒரே இனமாகக் கருதப்பட வேண்டும் என்பதே இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் வேறு இனத்தவர்கள் சேர்ந்த பல் கலாசாரங்களையும் சேர்ந்த மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் இலங்கையர் என்று கருதப்படுவர்.

ஜனநாயகத்தை மதிக்கும் நவீன அரசுகள் பல்வேறு கலாசாரத்தனித்துவங்களை மதித்து இக்கலாசாரப் பல்வகைமையை ஒன்றிணைந்து ஒரு நாட்டவர் என்ற வகையில் சுயாதீனமாக அபிவிருத்தியை நோக்கிப் பயணம் செய்யவே முயற்சிக்கின்றன.

அனைத்து நவீன அரசுகளும் பல் கலாசார சமூகங்களாகவேயுள்ளன. இவற்றுள் அபிவிருத்தியடைந்த நாடுகளும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் உண்டு. அபிவிருத்தியடைந்த நாடுகள் தம் நாடுகளின் பொருளாதார சமூக அரசியல் செயலொழுங்குகளின் போது கலாசார பன்மையை ஒரு பலமாக ஆக்கிக்கொண்டுள்ளன.

சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் அந்நாட்டு மக்களின் பல்வேறு கலாசார வேறுபாடுகளை நாட்டின் முன்னேற்றத்திற்கான ஒரு வழியாக ஆக்கிக்கொண்டுள்ளன. வேற்றுமையில் ஒற்றுமை என்பதைத் தொனிப் பொருளாகக்கொண்டு அவை இன்று அபிவிருத்தியடைந்து காணப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளில் அந்நாடுகள் ஒவ்வொரு இனத்தவரின் கலாசாரங்களுக்கும் இடைஞ்சல் விளைவிக்காதிருக்கவும் அவற்றை மதிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளன.

**கலாசார பல்வகைமையை கொண்ட நவீன அரசுகள் பற்றிய தகவல்கள்**

| நாடு | வாழும் பிரதான இனங்கள் | சமயம் | மொழிகள் |
|---|---|---|---|
| இங்கிலாந்து | ஆங்கிலேயர் கரீபியா இனத்தவர் ஆசியர்; | கிறிஸ்தவம் இஸ்லாம் | ஆங்கிலம் |
| மலேசியா | சீனர், முஸ்லீம், தாய் இனத்தவர், இந்தோனேசியர்; | இஸ்லாம் கிறிஸ்தவம் | மலே-மண்டரின் |
| ஐக்கிய அமெரிக்கா | செவ்விந்திய நீக்ரோக்கள் வெள்ளை அமெரிக்க; ஆசியர்; | கிறிஸ்தவம் ஹிந்து இஸ்லாம் பௌத்தம் | ஆங்கிலம் |

அட்டவணை 3.2

**செயற்பாடு 3.4**

மேற்படி அட்வணையில் காட்டப்படாத வேறு பல் கலாசார நாடுகள் சிலவற்றின் தகவல்களைத் தேடி அட்டவணைப்படுத்துக.

## 3.4 பல்கலாசார இணைப்பும் இலங்கையும்

ஒரு நாட்டில வாழும் அனைத்து கலாசாரங்களையும் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒன்றாக இணைவதன் மூலம் கட்டியெழுப்பப்படும் பலத்தை அந்நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்திக்கொள்ள இன்றைய சகல பல்கலாசாரங்களும் அரசுகள் முயற்சிக்கின்றன.

சமயம், சாதி, இனம், என்று பிரிந்திருப்பதன் மூலம் எந்த ஒரு இனமும் முன்னேற முடியாது. இலங்கையின் மக்கள் குழுக்கள் எந்தக் காரணத்துக்காயினும் பிரிந்திருப்பின் அது இந்நாட்டின் முன்னேற்றப் பாதைக்குத் தடையாக அமையும்.

மனிதர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் சமம். இலங்கையர்களாகிய நாம் அனைவரும் சமமான உரிமையுள்ளவர்கள். அடிப்படைத் தேவைகள் அனைவருக்கும் பொதுவாகும். அனைவருக்கும் பசி, கவலை, வலி, என்பன ஒரேமாதிரி தெரியும். குறுகிய அர்த்தமற்ற கருத்து வேற்றுமைகளில் பிரிந்திருப்பதைவிட இந்த சமமான தன்மைகளைப் பயன்படுத்தி இணைந்திருப்பதே முக்கியமானது.

அனைத்து மனிதர்களும் சுதந்திரமாக சம உரிமைகளுடன் பிறக்கின்றனர். அவர்கள் இனம், உடலின் நிறம் ஆண், பெண், பேதம், மொழி சமயம், அரசியல், கருத்துக்கள் நாடு என்ற பேதங் களைக் கவனிக்காது ஒன்றாக உரிமைகளை அனுபவிக்க வேண்டும்.

- **ஐக்கிய நாடு**

பண்டைக்காலம் முதலே இலங்கையில் எல்லா இனமக்களும் பரஸ்பர ஒற்றுமையுடன் கருமமாற்றியுள்ளனர். அதிகளவில் பின்வரும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

- திருகோணமலைக்கு அண்மையிலுள்ள வெல்கம விகாரையை ராஜராஜ சோழன் புனர் நிர்மாணம் செய்து "இராஜ இராஜ பெரும்பள்ளி" என்று பெயரிட்டான்.
- முதலாம் விஜயபாகு மன்னரின் பெயரால் "விஜயராஜ ஈஸ்வரம்" என்ற ஒரு சிவாலயம் கந்தளாய்ப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- யாப்பஹூவவின் புவனேகபாகு மன்னன் ஒரு முஸ்லிம் தூதுவரை எகிப்து சுல்தானிடம் அனுப்பி வைத்தான்.
- பொலநறுவை யுகத்தில் 1ஆம் விஜயபாகு அரசன் தலதா மற்றும் அத்துடன் இணைந்த சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக வேளக்கார என்ற தமிழர் படையணியிடம் ஒப்படைத்தான்.
- தெவிநுவர பெரஹரவில் ஒரு சிறப்பு அம்சமாக வேல் ஊர்வலம் இடம் பெறுகிறது.

எமது வரலாற்றில் இத்தகைய பல உதாரணங்களுண்டு. அவற்றினூடக நாம் ஒரு நாட்டவர் என்ற வகையில் ஒரு முகப்பட்டு செயலாற்றியமை தெளிவாகின்றது.





இந்துசமயப் பண்டிகை கண்டிப் பெரஹரா

உரு 3..4

இன்று நாட்டின் அனைத்து துறைகளிலும் பல்வேறு கலாசாரத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகக் கருமமாற்றுவதனால் அடைந்துள்ள வெற்றி குறிப்பிடத்தக்கது. பொருளாதாரம், சமூகம், அரசியல், நடவடிக்கைளின்போது சகல சமூகங்களினதும் பங்களிப்பு காணப்படுகின்றது.

உணவு, ஆடையணிகள், மொழி, கலை, விளையாட்டு போன்ற துறைகளில் எமது கலாசார ஒன்றிணைப்பு சிறப்பாக உள்ளது.

எமது உணவு வேளைகளில் பலவேறு கலாசாரங்களையும் சேர்ந்த உணவு வகைகள் உள்ளன. உதாரணமாக சோறு, பாண், வடை, அப்பம், புரியாணி, தோசை, போன்ற உணவுவகைகளக் கூறலாம். எல்லோரும் எல்லா வகையுணவுகளையும் உட்கொள்கின்றனர்.

ஆடையணிகளிலும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. சாரி, சல்வார், குர்தா போன்ற ஆடைகளை எல்லா இனத்தவர்களும் அணிகின்றனர்..



உரு 3..7
பல்கலாசாரத்திற்குரிய உணவுவகை

எமது தேசிய விளையாட்டு குழுக்களில் அனைத்துக் கலாசாரங்களையும் சேர்ந்த வீரர்கள் காணப்படுகின்றனர்.

சிங்கள, தமிழ் மொழிகளில் பல ஒற்றுமைகள் உண்டு. பல்வேறு சமய விழாக்களின் போது அனைத்து இனமக்களும் பங்குபற்றுவதைக் காணலாம். பௌத்த விகாரைகளில் தேவாலயங்கள் காணப்படுகின்றன. கலை விழாக்களில் கலாசார இணைப்புக் காணப்படுகின்றது.

நாட்டின் அனைத்து தொழில்களிலும் பல இனத்தவர்கள் ஈடுபட்டுள்ளனர். விவசாயம், மீன்பிடி, வியாபாரம், ஆகிய துறைகளில் அனைத்து மக்களும் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பங்களிப்புச் செய்கின்றனர்.

அனைத்து மனிதர்களும் குழுக்களும் அனைவரின் மகிழ்ச்சிக்குமாக கருமமாற்றினால் எவ்வளவு சிறப்பாக அமையும். அதன்படி பன்மைக் கலாசார சமூகத்தில் பிரவேசிக்கக் கிடைப்பது ஒரு பாக்கியமாகும். அதன் மூலம் ஒவ்வொரு கலாசாரமும் தம் வரலாற்று ரீதியான வளர்ச்சியின்போது ஈட்டிக்கொண்ட அனைத்து வெற்றிகளையும் அனுபவிக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

சமாதானம், பாதுகாப்பு, நியாயம் என்பன நாட்டு மக்கள் அனைவரினதும் உரிமைகளாகும். அனைவரும் இணைந்து மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு ஐக்கியமும் பலரும் சேர்ந்த ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். பல்வகைமையின் சிறப்புப் பலத்தை பயன்படுத்தி ஒரு நாட்டின் மக்களாக உயர்வடைவோம்.

"யாமெலாம் ஒரு கருணை அனை பயந்த எழில்கொள் சேய்கள் எனவே" என்று எமது தேசிய கீதத்தில் குறிப்பிட்டது போன்று ஒன்றிணைந்து நாட்டின் எதிர்காலத்திற்காக அர்ப்பணிப்புடன் கருமமாற்றுவது எமது கடமையாகும்.

**செயற்பாடு 3.4**

வேற்றுமையில் ஒற்றுமை,என்பதை எமது நாட்டின் அபிவிருத்திப் பணிகளின் போது பயன்படுத்திக்கொள்ளலாம். கலாசார ஒன்றிணைப்பு மூலம் பல துறைகளில் நாம் பெற்றுக்கொள்ளகூடிய வெற்றிகள் குறித்து உதாரணங்கள் தருக.

**செயற்பாடு 3.5**

"பல்கலாசாரத்தில் பிறக்கக் கிடைத்தமை ஒரு பாக்கியமாகும்." என்ற தலைப்பில் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக.